| | |
|---|---|
| வெளியிடுபவர் | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் |
| திகதி | 2021.01.12 |

**சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி - நிபந்தனையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட நோக்கமொன்றுக்காக வியாபாரத்தினை மீள ஆரம்பித்தல்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 31(5)(அ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் கம்பனியின் எஞ்சியுள்ள வைப்புக்களின் ஐம்பது சதவீத (50%) மீள்கொடுப்பனவு (மீள்கொடுப்பனவுத் திட்டம்) நோக்கத்திற்காக **மாத்திரம்** 2021 சனவரி 13ஆம் திகதியிலிருந்து தொடங்கி 2021 ஏப்பிறல் 12ஆம் திகதி வரையான மட்டுப்படுத்தப்பட்ட மூன்று (03) மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்காக பொது நலனுக்காகவும் கம்பனியின் வைப்பாளர்களின் நலன்களுக்காகவும் பல **கட்டாய நிபந்தனைகளுக்கு** உட்பட்டு நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழாத்தின் (முகாமைத்துவக் குழாம்) மேற்பார்வையின் கீழ் வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக மற்றும் வரையறுக்கப்பட்ட காலமொன்றுக்காக **வியாபாரத்தினை பெயரளவில் மீள ஆரம்பிப்பதற்கு** சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியினை அனுமதிக்கின்ற கட்டளையொன்றினைப் பிறப்பித்துள்ளது.

இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகள் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபையினதும் சிரேஸ்ட முகாமைத்துவத்தினதும் இயலாமை என்பன காரணமாக நாணயச் சபையானது 2018 சனவரி 02 அன்று கம்பனியின் பணிப்பாளர்களுக்கு பணிப்புரைகளை விடுத்து கம்பனியின் விவகாரங்களைத் மேற்பார்வை செய்வதற்கு முகாமைத்துவக் குழாமொன்றினை நியமித்தது.

கம்பனியினை புத்துயிரளிப்பதற்குப் பொருத்தமான முதலீட்டாளரை (முதலீட்டாளர்களை) கொண்டு வருவதற்கு சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபையினை நாணயச் சபை பணித்திருந்த போதிலும் நீடித்து நிலைத்திருக்கத்தக்க முதலீட்டு முன்மொழிவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் கம்பனியின் நிதி நிலைமை தொடர்ந்தும் சீர்குலைந்தது. அதேவேளை, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் வைப்புகளின் 30 சதவீதமானவை 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டன.

தொடர்ச்சியாக சீர்குலைந்துவருகின்ற நிதியியல் நிலைமை மற்றும் நீடித்து நிலைத்திருக்கத்தக்க புத்துயிரளிப்பு திட்டமொன்று கிடைக்கப்பெறாமை என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையானது 2020 யூலை 13ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிதித் தொழில் சட்டத்தின் 31(1)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் வியாபாரத்தினை இடைநிறுத்துவதற்குத் தீர்மானித்தது.

இடைநிறுத்தல் காலப்பகுதியின் போது, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு நாடு முழுவதுமுள்ள மக்கள் வங்கி கிளைகள் ஊடாக தொடங்கப்பட்டது. 2020 இறுதியளவில் மொத்தமாக 9,660 காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களில் 25 சதவீதமானோருக்கு காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர் ஒருவருக்கு ரூ.600,000 கொண்ட உயர்ந்தபட்சத் தொகை வரை மொத்தமாக ரூ.834.1 மில்லியன் கொண்ட மொத்தத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய தொகையானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் தகைமைபெறுகின்ற நட்டஈட்டின் ரூ.982.9 மில்லியனில் 84.9 சதவீதத்தினை உள்ளடக்குகின்றது. இதுவரையில் தமது நட்டஈட்டுக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளாத சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் தகைமையுடைய வைப்பாளர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் ரூ.600,000 வரை நட்டஈட்டு கொடுப்பனவினை இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டம் தொடர்ந்தும் கொடுப்பனவு செய்யும்.

இடைநிறுத்தல் காலப்பகுதியின் போது, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி, பிரதானமாக அந்நிறுவனத்தின் எஞ்சியுள்ள வைப்பாளர்களின் ஒரு பகுதியை மீள்கொடுப்பனவு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய தங்கக் கடன்களின் அறவீடுகள் ஊடாக குறிப்பிடத்தக்களவு பணத்தொகையொன்றினை அறவிடுவதற்கு இயலுமாகவிருந்தது. மேலும், அவ்வாறு அறவீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து எஞ்சியுள்ள வைப்பாளர்களுக்கு மீள்கொடுப்பனவு செய்வதற்கு வைப்பாளர்களிடமிருந்தும் அதேபோன்று கம்பனியிடமிருந்தும் இலங்கை மத்திய வங்கிக்கு தொடர்ச்சியாக கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றன.

கம்பனியினை புத்துயிரளிப்பதற்கு மூலதன உட்செலுத்தலொன்றின் ஊடாக நீடித்து நிலைத்திருக்கத்தக்க திட்டமொன்று கிடைக்கப்பெறாமை, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் கடன்தீர்க்கவகையற்ற நிலைமை அத்துடன் நிதியியல் நிலைமையில் தொடர்ச்சியான சீர்குலைவு, நீண்ட தீர்த்துக்கட்டல் செயன்முறையின் பின்னர் வைப்புக்களின் ஒரு பகுதி கிடைக்கப்பெறுவதன் காரணமாக வைப்பாளர்கள் மீதான நிதியியல் தாக்கம் என்பவற்றைப் பரிசீலனையில் கொண்டு, நாணயச் சபையானது மேலே பந்தி 1 இல் குறிப்பிடப்பட்ட மீள்கொடுப்பனவு திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் நோக்கத்திற்காக **மாத்திரம்** நிதித்தொழில் சட்டத்தின் 31(5)(அ) பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2021 சனவரி 13ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற 2021 ஏப்பிறல் 12ஆம் திகதி வரையான மூன்று (03) மாத காலத்திற்கு **வியாபாரத்தினை பெயரளவில் மீளத் தொடங்குவதற்கு** சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியினை அனுமதிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

முகாமைத்துவக் குழாமானது சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் விவகாரங்களை தொடர்ந்தும் முகாமை செய்வதுடன் மீள்கொடுப்பனவுச் செயன்முறைகளை மேற்பார்வை செய்கின்ற அதேவேளை சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் அல்லது தொடர்புடைய தரப்பினர்கள் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் எவையேனும் நடவடிக்கைகளில் ஏதேனும் விதத்தில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிடப்பட்ட மீள்கொடுப்பனவுத் திட்டம் மற்றும் கம்பனிக்கான அனைத்து பண நிலுவைகளையும் அறவீடு செய்தல் என்பவற்றை நிறைவேற்றுவதைத் தவிர, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ்

பிஎல்சி ஏதேனும் நிதி வியாபாரத்தை அல்லது எதுவாயினும் நிதியல்லா வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கு **அனுமதிக்கப்படவில்லை** என்பதனை இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு அறியத்தருகின்றது. எனவே, கீழே குறிப்பிடப்பட்டவாறு சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கான எவையேனும் நிலுவைகளின் தீர்ப்பனவு தவிர ஏதேனும் விதத்தில் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியுடன் ஏதேனும் **வைப்புக்களை வைப்பதிலிருந்தும்** அல்லது வேறு வியாபாரத்தில் ஈடுபடுவதிலிருந்தும் **தவிர்ந்துக்கொள்ளுமாறு** பொதுமக்கள் தயவாக கோரப்படுகின்றனர்.

சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் அனைத்து கடன்படுநர்களும் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கான அவர்களது நிலுவைகளை சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பெயரின் கீழ் பின்வரும் வங்கிக் கணக்குகள் ஊடாக மாத்திரம் உரிய காலத்தில் கொடுப்பனவு செய்யவேண்டுமெனவும் நிலுவைகளை மீளக் கொடுப்பனவு செய்யாமைக்காக அவர்களுக்கெதிராக ஏதேனும் சாத்தியமான வழக்காடல்களைத் தவிர்ப்பதற்கு அனைத்து கொடுப்பனவுகளுக்குமான பதிவுகளைப் பேணுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

| **வங்கி** | **கிளை** | **கணக்கு இலக்கம்** |
|---|---|---|
| சம்பத் பாங்க் பிஎல்சி | தலைமை அலுவலகம் | 2930013377 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | கொள்ளுபிட்டி | 1107428801 |

**30 சதவீத மீள்கொடுப்பனவு மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தகைமையுடைய நட்டஈடு என்பவற்றைக் கழித்ததன் பின்னர் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் எஞ்சியுள்ள வைப்புப் பெறுமதியின் 50 சதவீத மீள்கொடுப்பனவு ஆரம்பிக்கும் திகதி, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி மூலம் உரிய காலத்தில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு:

| **நிறுவனம்** | **நோக்கம்** | **தொலைபேசி இலக்கம்** | **மின்னஞ்சல் முகவரி** |
|---|---|---|---|
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | நிபந்தனை அடிப்படையில் வியாபாரத்தினை மீள் ஆரம்பித்தல் | 011 2477504<br>011 2398806<br>011 2398595 | snbfi_query@cbsl.lk |
| தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் | இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் | 011 2477261 | dred@cbsl.lk |
| அழைப்பு நிலையம், இலங்கை மத்திய வங்கி | பொதுவான விசாரணைகளுக்கு | 011 2477966 | |

| | | | |
|---|---|---|---|
| சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி/ முகாமைத்துவக் குழாம் | வைப்புக்கள், முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்தல் மற்றும் வேறு தொளிவுபடுத்தல் தொடர்பான விசாரணைகள் | 011 7534800 | info@sfs.lk |